# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 02.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 1598/B/20</u>**

திரு.M. கிருஷ்ணகுமார் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
தாராபுரம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.M. கிருஷ்ணகுமார் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திரு.ராஜேந்திர பூபதி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் பங்கேற்றார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 17.09.2019 தேதியிட்ட மனுவில், பட்டா மாறுதல் தொடர்பான தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், தாராபுரம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. 17.10.2019 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் தகவல் திருப்தியளிக்காததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 12.11.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்தும் தகவல் கிடைக்கப்பெறாததால், மனுதாரர் 11.02.2020 தேதியிட்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கியுள்ளதாக எடுத்துரைத்தார். மனுதாரர் அதனை ஏற்பளிப்பு செய்து, தான் கோரிய தகவல்களை மனநிறைவுடன் பெற்றுக்கொண்டதாக கூறி, 24.10.2020 தேதியிட்ட எழுத்துப்பூர்வ கடிதின் வாயிலாக தெரிவித்துள்ளார். மனுதாரர் போதிய தகவல்களை பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(ரா.பிரதாப்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1598/B/20</u>**
**<u>பெறுநர்</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
தாராபுரம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

திரு.M. கிருஷ்ணகுமார்,
1/16, முத்து நகர்,
கொட்டாபுளிபாளையம் ரோடு,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638 657.

Copy to: File
MP/PA-06.11.20